1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி: ஏற்றுமதி செய்யப்படக் கூடிய பொருள்களின்மீது மாநில அரசுகள் வாங்கும் வரி/விற்பனை வரி விதிப்பதை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்த, இந்திய அரசின் வணிக அமைச்சகம் கோரியுள்ளதாக இந்தப் பேரவைக்குத் தெரியவருகிறது. மேற்கூறிய கோரிக்கைக்கு இணங்க அரசியலமைப்புச்சட்டம் திருத்தம் செய்யப்பட்டால் மாநில அரசின் வருவாய் அளவும், கூட்டாட்சி நிதியமைப்பின், கீழுள்ள மாநில அரசுகளின் வரி விதிக்கும் அதிகார வரம்பும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுமாதலால், இது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவிப்பதோடு அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டாம் என்று இந்திய அரசினை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது. தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

ஈ. சென்னை—பல்கலைக் கழக மதுரை காமராசர் பல்கலைக் கழக திருத்தச் சட்ட முன் வடிவு 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: ''சென்னை பல்கலைக் கழக, மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்ட முன் வடிவு 1979 – (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.''

8. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சென்னை பல்கலைக் கழக மதுரை—காமராசர் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ''1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக, மதுரை—காமராசர் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/79) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என மொழிகிறேன்.

பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி போன்று மருத்துவக் கல்வியும் இம்மாநிலத்தில் நீண்டு நிலைத்த பாரம்பரியம் பெற்றிருப்பதால், மருத்துவக் கல்வி இயக்குநரை, சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றம், பேரவை மற்றும் கல்விக்குழுவில் துறைச் சார்ந்த

---

* 1979, ஏப்ரல் 27 ஆம் தேதியிட்ட தமிழ்நா சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.